**மாந்தை மேற்கு பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 மே 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து மாந்தை மேற்கு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இன் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

**(அ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உரிய விதியின் அறிவுறுத்தலுக்கமைய செயற்பட வேண்டும் | எதிர்வரும் காலங்களில் செயலாற்றுகை அறிக்கையானது தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |

**(ஆ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக சபையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சபையின் பயன்பாட்டிலுள்ள 44 காணிகளிற்கான உறுதிகள் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | காணிகளின் உரித்தை உறுதிப்படுத்தும் உறுதிகளை சபையில் பேணிப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | காணி உரித்து ஆவணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (ii) | 2009 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் ரூபா 850,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் உரித்து சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமை சபைக்கு மாற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| | - இலக்கம் 371 | மீளாய்வாண்டின் சபையின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 13,952 முற்பணங்கள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | முற்பணங்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இம் முற்பணத்தை சீராக்கம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. |
| (ஆ) | 29 திசெம்பர் 2016 ஆம் திகதிய 30/2016ஆம் இலக்கஅரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றுநிருபம் | சபையில் காணப்படும் பதினேழு வாகனங்களிற்கு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும் | விரைவில் எரிபொருள் பரிசோதனை நடவடிக்கை நிறைவேற்றப்படும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 வருமான நிர்வாகம்

#### 2.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலங்கள் | 2018 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | 31.12.2018 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் ரூபா | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | 31.12.2017 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் ரூபா |
| i. வாடகைகள் | 9,001,660 | 6,355,635 | 734,550 | 8,623,000 | 8,077,925 | 545,075 |
| ii. அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 541,500 | 839,230 | - | 597,250 | 710,640 | 113,390 |
| iii ஏனைய வருமானம் | 11,842,245 | 25,272,438 | 439,500 | 10,801,139 | 11,429,909 | 628,770 |
| | **21,385,405** | **32,467,303** | **1,174,000** | **20,021,389** | **20,218,474** | **1,287,235** |

#### 2.1.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாடகை நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 156,431 இனை அறிவிடுவதற்கு 03 ஆண்டுகளாக ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நிலுவை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

#### 2.1.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,041,429 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் பெறப்படவேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நீதி மன்ற தண்டப்பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

(ஆ) முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,276,762 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்படவேண்டியிருந்தன. | முத்திரைக் கட்டணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | முத்திரைக் கட்டணங்களை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள் மற்றும் மக்கள் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயம் பின்வருமாறு.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது 2018/61 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக்கு கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாப்பதுடன் நிலைத்திருக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் கடல், கடலோர மாசு கட்டுப்பாடுகள் தொடர்பான திட்டங்கள் எவையும் தயார்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவித்தலுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 64 ஆகவும் உள்ளாடியான பதவியணியினர் எண்ணிக்கை 58 ஆகவும் உள்ளமையால் 06 வெற்றிடங்கள் உள்ளமை அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படுகின்ற வாகனங்களில் எட்டு வாகனங்களுக்கு வாகன தரிப்பிடம் காணப்படவில்லை. இதனால் வாகனங்கள் திறந்த வெளியில் காணப்படுவதனால் அவ்வாகனங்களை பாதுகாப்பதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | எதிர்காலத்தில் சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத்தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பயன்படுத்தப்படாத ஒன்பது வாகனங்கள் தொடர்பாக திருத்துவதற்கோ பயன்பாட்டிற்கு ஏற்றவகையில் செயற்படுத்தவோ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனத் திருத்தங்களை மேற்கொண்டு வாகனங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | பயன்படுத்தப்படாத வாகனங்களை திருத்துவதற்காக இயந்திரப் பொறியியலாளரின் அறிக்கையினை பெற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சபையின் வழங்கு பொருட்களினதும் தேவைப் பொருட்களினதும் பாதீட்டு செலவினம் ரூபா 3,925,500 ஆக இருந்த போதும் உண்மைச் செலவினம் ரூபா 5,014,386 ஆக உள்ளது. | பாதீடு தயாரிக்கப்படும் போது வினைத்திறனான கட்டுப்பாட்டு கருவிகளை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |
| (ஆ) | மீளாய்வாண்டில் மூலதன சொத்தக்களைப் பழுதுபார்த்தல் பாதீட்டுச்செலவினம் ரூபா 4,702,500 ஆக இருந்த போதும் உண்மைச் செலவினம் ரூபா 5,967,599 ஆக உள்ளது | பாதீடு தயாரிக்கப்படும் போது வினைத்திறனான கட்டுப்பாட்டு கருவிகளை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |